**IN THE COURT OF THE I-ADDITIONAL DISTRICT COURT, RANIPET.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**OS.No.40/2021 - PW-1**

| Name | திரு.பிரகாசம் |
|---|---|
| Father's Name | திரு.மாரிமுத்து |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 21.07.2025.

**குறுக்கு விசாரணை :–**

நான் 1-ம் வாதியான என் அப்பாவிற்காகவும் சாட்சியம் அளிக்கிறேன். என் அப்பாவிற்கு உடல்நிலை சரியில்லை என்பதற்கு சான்று எதுவும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்து அனுமதி எதுவும் பெறவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்துகளை பாகப்பிரிவினை கேட்டு இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளேன். சின்னக்கண்ணு, பாக்கியம்மாள், கிருஷ்ணன், பொன்னம்மாள் ஆகியோர் பெயர்களில் உள்ள சொத்துகளில் பாகப்பிரிவினை கேட்கிறோம். சின்னக்கண்ணு என்பவர் பெயரில் கனியனூர் கிராமத்தில் உள்ள சொத்துகளிலும், பாக்கியம்மாள் என்பவர் பெயரில் மருதமங்கலம் கிராமத்தில் உள்ள சொத்துகளிலும் பாகப்பிரிவினை கேட்டுள்ளேன். சின்னக்கண்ணு பெயரில் 7 ஏக்கர் சொத்தும், பாக்கியம்மாள் பெயரில் 3 ஏக்கர் சொத்தும் உள்ளது. சின்னக்கண்ணு, பாக்கியம்மாள், கிருஷ்ணன் மற்றும் பொன்னம்மாள் ஆகியோர் சொத்துகளை பாகப்பிரிவினை செய்யவில்லை. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்திலுள்ள விவரங்கள் எனக்கு தெரியும். நாங்கள் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் உள்ள சங்கதிகளை நானும், என் அப்பாவும் தான் வழக்கறிஞருக்கு கூறி அவர் அதை தயார் செய்தார். அந்த வழக்குரையில் 4-வது பத்தியில் பாக்கியம்மாள் மற்றும் சின்னகண்ணு ஆகியோர் மற்ற சொத்துகள் சம்மந்தமாக வாய்மொழியாக பாகப்பிரிவினை செய்து கொண்டதாக சொல்லியிருக்கிறோம் என்றால் சரிதான். அந்த வாய்மொழி பாகப்பிரிவினை எந்த வருடத்தில் எந்தெந்த சொத்துகள் சம்மந்தமாக செய்துகொண்டார்கள் என்று நாங்கள் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். வாய்மொழியாக பிரித்துக்கொண்ட சொத்துகளை யார்யார் அனுபவம் செய்தார்கள் என்று நாங்கள் சொல்லவில்லை என்றால் சரிதான். சின்னக்கண்ணு மற்றும் பாக்கியம்மாள் பெயர்களில் தனித்தனியாக சொத்துகள் இருந்து அவற்றை அவர்கள் தனித்தனியாக அனுபவம் செய்து வந்தார்களா என்பதை காண்பிக்க பட்டா உள்ளதா என்றால் அவர்கள் தனியாக அனுபவம் செய்யவில்லை. கூட்டாக தான் அனுபவம் செய்து வந்தார்கள். அவர்கள் பெயரில் கூட்டாகவோ, தனியாகவோ பட்டா தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்யும் போது எனக்கு வயது 35 என்றால் சரிதான். பாக்கியம்மாள் என்பவர்

03.12.1994-ம் தேதி இறந்தார். சின்னக்கண்ணு இறப்பதற்கு முன்பே பாக்கியம்மாள் இறந்துவிட்டார். சின்னக்கண்ணு 01.01.1995 -ல் இறந்தார். சின்னக்கண்ணு என்பவருக்கும் பாக்கியம்மாளுக்கும் பிறந்தவர்கள் தான் பொன்னம்மாள், சுப்பிரமணி, முனுசாமி மற்றும் சேட்டு என்றால் சரிதான். பாக்கியம்மாள் மற்றும் சின்னக்கண்ணுவின் சொத்துகளை யார்யார் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் நாங்களும், பிரதிவாதிகளும் கூட்டாக அனுபவம் செய்து வருகிறோம். சுப்பிரமணி என்பவர் இறந்துவிட்டதால் 3 முதல் 8 பிரதிவாதிகளை வழக்கில் சேர்த்துள்ளோம் என்றால் சரிதான். கூட்டாக அனுபவம் செய்து வருகிறோம் என்பதை காண்பிக்க எங்கள் பெயருடன் கூடிய கூட்டுப்பட்டா உள்ளதா என்றால் சில சொத்துகளுக்கு மட்டும் என் அப்பா பெயரில் தனியாக பட்டா உள்ளது. வாதிகள் பெயரிலும், பிரதிவாதிகள் பெயரிலும் கூட்டாக பட்டா தாக்கல் செய்யாததால் வழக்கு சொத்துகளில் நாங்கள் கூட்டாக அனுபவம் செய்யவில்லை என்றால் தவறு.

(பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர்கள் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.)

Sd/-A.Balakrishnan,
I Additional District Judge,
Ranipet.